பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 06 செவ்வாய்க்கிழமை 22.11.2022 கதிர் 17

**இனிது ரகசியம் அல்ல!**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், தமிழ்த் தேசிய கட்சிகளுக்கும் இந்த வாரம் நல்ல திருவிழாதான்.

கூட்டாத கூட்டங்களை எல்லாம் வரிசையாகக் கூட்டுவதற்குக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் ☞2

# பிறப்புச் சான்றிதழில் தேசிய இனம் நீக்கம்?

## புதிய யோசனை ஆராய்வு பதிவாளர் நாயகம் தகவல்



பிறப்பு சான்றிதழில் இனிமேல் 'தேசிய இனம்' என்பதை நீக்குவது குறித்த யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. பதிவாளர் நாயகம் திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது.

பிறப்பு சான்றிதழில் தற்போது காணப்படும் 'சிங்களவர்', 'தமிழர்', 'முஸ்லிம்', 'பறங்கியர்', 'இந்திய வம்சாவளியினர்' போன்ற பதங்கள் நீக்கப்படும் என பதிவாளர் நாயகம் பிரசாத் அபேயவிக்கிரம தெரிவித்துள்ளார். ☞2

## ஐ.ம.சு.கூட்டமைப்பின் செயலாளராக திலங்க!

### அமரவீரவிடமிருந்து பிடுங்கியது சு.க.





ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளராக இருந்த மஹிந்த அமரவீரவை அப்பதவியிலிருந்து நீக்கப்பட்ட திலங்க சுமதிபாலவை பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ☞2

## மஹிந்த கால இரகசியங்களை போட்டுடைப்பாராம் மைத்திரி!



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இதுவரை வெளியில் தெரியவராத அரசியல் இரகசியங்கள் அடங்கிய புத்தகமொன்றைத் தாம் எழுதி வருகிறார் எனத் தெரிவித்துள்ளார். அத்துடன், தான் எழுதியுள்ள ☞2

## காலை சாணக்கியனுடன் மாலையில் சுமந்திரனுடன் பிள்ளையான் வாக்குவாதம்








கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மட்டக்களப்பு மாவட்டத்தை சூறையாடுகிறார் எனத் தெரிவித்து அவர் மீது பல மோசடிக் குற்றச்சாட்டுக்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் நாடாளுமன்றத்தில் தொடுத்தமையால் இருவருக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 6 ஆம் நாள் ☞2

## ஜாவா பூகம்பத்தில் 162 பேர் உயிரிழப்பு



இந்தோனேசியாவில் மக்கள் தொகை அதிகம் கொண்ட ஜாவா தீவில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

மேற்கு ஜாவா மாகாணத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.6 அலகாக ☞12

## மாவீரர் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவரங்கு பருத்தித்துறையில்!



பருத்தித்துறை நீதிமன்ற வீதியில் ஒழுங்கமைக்கப்பட்ட மாவீரர் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவு மண்டபத்தில் மாவீரர்களுக்கான அஞ்சலி ☞12

## வவுனியா இராணுவ ஆண் தாதி மகாவலி ஆற்றில் சடலமாக மீட்பு

கட்டுகஸ்தோட்டை, தொடம்வல பாலத்துக்கு அருகில் உள்ள மகாவலி ஆற்றில் இராணுவ மருத்துவப் பிரிவைச் சேர்ந்த ஆண் தாதி ஒருவரின் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

36 வயதுடைய இந்நபர் வவுனியாவில் உள்ள இராணுவ மருத்துவப் பிரிவின் இராணுவ முகாமில் பணிபுரிந்து வந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். ☞12

## பணவீக்கம் சற்று வீழ்ச்சி

ஒக்டோபர் மாதத்திற்கான பணவீக்கம் 70.6 ஆக குறைந்துள்ளதாக மக்கள் தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

செப்டம்பர் மாதத்தில் பணவீக்கம் 73.7 ஆக பதிவாகியிருந்தது.

## சாட்டியிலும் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக ஆரம்பம்



தீவகம் சாட்டி மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் வார ஆரம்ப நாளான நேற்று நினைவேந்தல் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது. ☞12

## மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் திலீபனின் தூபி அருகே!





(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,நவ.22

மாவீரர் வாரம் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில். யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலாயத்திற்கு முன்பாக மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் மக்கள் அஞ்சலிக்காக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதன்போது 34 கல்வெட்டுக்கள் 17 மாவீரர்களின் பெற்றோரால் திங்கட்கிழமை மாலை ☞12

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தீர்மானத்திருப்பதுதான் திருவிழா சமாவுக்குக் காரணம்.

வரவு - செலவு திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீது எப்படி வாக்களிப்பது என்பது குறித்து ஆராய்வதற்காக கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு இன்று காலை நாடாளுமன்றத்தில் கூடுகின்றது. அந்த விடயம் மட்டுமே அதில் பேசி தீர்மானிக்கப்படும். நாடாளுமன்றத்திற்கு மூன்று மாத கால விடுமுறை அனுமதி பெற்றிருக்கும் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் இன்றும் நாடாளுமன்றத்திற்கு சமுகம் தர மாட்டார். அவர் இல்லாத நிலையில் கூடும் கூட்டமைப்பு நாடாளுமன்ற குழு அதிக விடயங்களை பிய்த்து உதறி ஆராய்வதற்கு இடமில்லை.

ஆனால் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுவைக் கூட்டுங்கள், பல விடயங்கள் குறித்து பேச வேண்டி இருக்கின்றது என ஸ்ரீதரன் எம்.பி. சம்பந்தனிடம் முறைப்பாடு செய்தமைக்கு அமைய, நாளை புதன்கிழமை மாலை 5.30 மணிக்குத் தமது கொழும்பு இல்லத்தில் அந்தக் கூட்டத்தை கூட்டி இருக்கிறார் சம்பந்தன்.

அடுத்து, தமிழ் மக்களின் அபிலாஷை சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்ற முடிவை ஏகோபித்து எடுப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுக்குக் கூட்டமைப்பு கொடுத்த அழைப்புக்கு இணங்க, அந்தக் கூட்டம் வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை (நாளை மறுதினம்) மாலை 5.30 மணிக்கு சம்பந்தன் ஐயா வீட்டில் நடக்கின்றது. அதற்கும் அவரே நேரம் ஒதுக்கிக் கொடுத்திருக்கின்றார்.

கூட்டமைப்பின் பங்காளி கட்சித் தலைவர்கள், நீதியரசர் விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரன் போன்றோர் இதில் பங்குபற்றுவர் எனத் தெரிகின்றது. கஜேந்திரகுமார் பங்குபற்றுவாரா என்பது இன்னும் உறுதியாகவில்லை.

இந்தக் கூட்டம் குறித்து தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் என்.ஸ்ரீகாந்தாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அவருடன் ஒரே கூட்டில் இருக்கும் விக்னேஸ்வரனும் சுரேஷ் பிரேமச்சந்திரனும் அது குறித்து - ஸ்ரீகாந்தா அழைக்கப்படாதமை குறித்து - கேள்வி எழுப்பினரா என்பதும் தெரியவில்லை.

அடுத்த நாள் சனிக்கிழமை 26 ஆம் திகதி மாலை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் பிரதானிகளுக்கான கூட்டத்துக்கும் அழைப்பு விடுத்திருக்கிறார் சம்பந்தன் ஐயா.

கூட்டமைப்பின் கூட்டு நிலைப்பாடு தொடர்பான சர்ச்சைகள் சந்தி சிரிக்கும் விவகாரமாகியிருக்கும் இந்நிலையில் சனிக்கிழமை கூட்டம் 'வியட்நாம் வீடு' சந்திப்பாக அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

'கூட்டமைப்பு விபச்சார வீடா?' என்பது தொடங்கி பல சர்ச்சைக்குரிய விடயங்கள் விவாதப் பொருள்களாகக் காத்திருக்கின்றன.

எல்லாம் சரி. எல்லா கூட்டங்களும் காலம் பிந்தியாவது நடக்கின்றன. ஆனால் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசின் தேசிய மாநாடு மட்டும் நடப்பதற்கான அசுமாத்தமே இல்லை. நடந்தால் தமது தலைமை பறிபோய் விடுமோ என்ற 'நியாயமான' பயத்தில் அந்தக் கூட்டத்தை நாளை, நாளை என்று 'பிள்ளையார் கல்யாணம் போல' வெற்றிகரமாக ஒத்தி வைத்து வருகின்றார் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா.

மூன்று, நான்கு வருடங்களாகத் தேசிய மாநாட்டைக் கூட்டாத இலங்கைத் தமிழரசு கட்சியை அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பட்டியலில் தேர்தல் ஆணையம் வைத்துப் பேணுவதற்கு ஆட்சேபம் தெரிவித்து, தேர்தல் ஆணையத்துக்கு, அத்துறையுடன் சார்ந்த ஒருவரின் மேற்பார்வையில் நிபந்தனை கடிதம் **(letter of demand)** அனுப்புவதற்கு ஒரு தரப்பு தயாராகி வருகிறது என நம்பகமாகத் தெரிய வந்தது.

இந்தத் தவறுக்காகத் தேர்தல் ஆணையம் மீது வழக்கு தொடர்வதற்கான முன்னேற்பாடாகவே இத்தகைய கடிதம் அனுப்பப்படுவதாகக் கூறப்பட்டது.

உரிய காலத்தில் கூட்டம் நடத்தப்படவில்லை என்ற காரணத்திற்காக தமிழரசின் பதிவு இடைநிறுத்தப்பட்டால், கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளான ரெலோவின் 'கலங்கரை விளக்கம்' சின்னமும், புளொட்டின் 'நங்கூரச் சின்னமும்' காத்திருக்கின்றன. அந்தச் சின்னங்களில் ஒன்றில் வரக்கூடிய தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைதான் இனிக் கூட்டமைப்புக்கு வரும்.

என்ன செய்யப் போகின்றார் மாவை? ஒருவருக்கும் தெரியவில்லை.!

**- மின்னல் -**

## பிறப்புச் சான்றிதழில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சமூகத்தில் தற்போது காணப்படும் விவகாரங்கள் மற்றும் சர்வதேச அளவில் காணப்படும் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள அவர், அதேவேளை தேசிய இனம் என்பதை அகற்றுவதற்குப் பல தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தராதரத்திற்கு ஏற்ப பிறப்புச் சான்றிதழில் மாற்றங்களை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், சர்வதேச தராதரங்களின் அடிப்படையில் பிறப்பு சான்றிதழை ஒருவர் தனது தாய்மொழியிலேயே பெற்றுக்கொள்ள முடியும், ஆனால் இலங்கையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கிடைப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக எதிர்காலத்தில் வெளிநாட்டிற்கு செல்லும்போது பிறப்பு சான்றிதழை மொழிபெயர்க்கவேண்டிய தேவையில்லை எனத் தெரிவித்துள்ள பதிவாளர் நாயகம் சில பாதுகாப்பு ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன என்றும் கூறினார்.

தேசிய அடையாள அட்டை இலக்கத்தைச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விரும்பினால் தேசிய இனம் என்பதை இணைத்துக்கொள்ள முடியும், எனினும் தந்தை தாயின் திருமண நிலை காணப்படாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.ம.சு.கூட்டமைப்பின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு நேற்றுக் கூடி இதனைத் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பில் இன்று அதற்கு எதிராக வாக்களிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவும் தீர்மானித்துள்ளது.

## மஹிந்த கால ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
Оபுத்தகத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் வெளியிடவுள்ளார் எனவும் அவர் கூறியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவுவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற அரசியல் சம்பவங்கள் குறித்து தான் எழுதும் புத்தகத்தில் இடம்பெறும் என அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மைத்திரிபால சிறிசேன இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள் மத்தியில் சென்றடையாத சில சம்பவங்கள் தான் எழுதும் புத்தகத்தின் மூலம் வெளிவரும் என்றும் முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார்.

## காலை சாணக்கியனுடன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காலை விவாதம் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் உரையாற்றிய போதே இந்தத் தர்க்கம் ஏற்பட்டது.

சாணக்கியன் எம்.பி. உரையாற்றும் போது -

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரான இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் செய்யும் மோசடியைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கையை எடுங்கள். முடிந்தால் அவரது திருட்டைத் தடுத்து நிறுத்துங்கள். சந்திரகாந்தன் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சூறையாடுகின்றார். - என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் -

சாணக்கியன் தொடர்ந்து எனது பெயரைப் பயன்படுத்துகின்றார். பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார். முறையற்ற வகையில் தாழ்த்திப் பேச வேண்டாம். - என்றார்.

இந்நிலையில் தனது உரையைத் தொடர்ந்த சாணக்கியன் எம்.பி. -

நாடாளுமன்றத்தில் எம்.பிக்களுக்குப் பேச்சு உரிமை உள்ளது. இவரது 20 மோசடிகள் தொடர்பான விவரங்கள் என்னிடத்தில் உள்ளன. 'கனிஷ்கா' என்ற இவருக்கு ஆதரவான நிறுவனத்தின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயத்துறை அழிக்கப்படுகின்றது. வட்டவான் பிரதேசத்தில் இவரது ஆதரவாளர்களுக்குக் காணி வழங்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட மக்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்துவதற்கு இவர் பெரும் தடையாக உள்ளார். மறுபுறம் வீதி அபிவிருத்திலும் மோசடி இடம்பெறுகின்றது. அனைத்து அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் அரச நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது. முடிந்தால் இவற்றை அவர் பொய் என்று சபையில் நிரூபித்துக் காட்டட்டும் - என்றார்.

இதன்போது மீண்டும் எழுந்த இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் -

சாணக்கியன் தொடர்ந்து எனது பெயரைக் குறிப்பிட்டு பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். முறைகேடான வகையில் பேசுகின்றார். - என்றார்.

மீண்டும் தனது உரையைத் தொடர்ந்த சாணக்கியன் எம்.பி.-

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்குச் சொந்தமான காணியை இவரது மைத்துனர் முறைகேடு செய்துள்ளார். நான் பொய் உரைக்கவில்லை ஆதாரம் உள்ளது. இவரது தரப்பினர் போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புபட்டுக் கைது செய்யப்பட்டுள்ளார்கள். காலநிலை மாற்றத்துக்கான பல்கலைக்கழகத்தை ஸ்தாபிக்க முன்னர் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தித் குழுத் தலைவர் பதவியில் இருந்து இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனை மாற்றியமைக்க வேண்டும். ஏனெனில் இவர் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மாத்திரமல்ல முழு நாட்டுக்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை வளங்களைச் சூறையாடுகின்றார் - என்றார்.

இதே சமயம் நேற்று மாலை நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றிய பிள்ளையான் சாணக்கியனுக்கு எதிராக பல்வேறு விடயங்களை முன் வைத்தார். அந்தச் சமயம் சபையில் சாணக்கியன் இருக்கவில்லை. எனினும் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் அமர்ந்திருந்தார்.

சாணக்கியனுடைய பெயரை சிங்கள நாமம் போல பிள்ளையான் உச்சரிக்க முயன்ற போது அதை சுமந்திரன் ஆட்சேபித்தார். சாணக்கியன் இல்லாத சமயத்தில் சாணக்கியனுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன் வைப்பதை சுமந்திரன் கடும்சியாக எதிர்த்தார். அதனால் இரண்டு பேருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

பிள்ளையான் தங்களின் கூட்டமைப்பு எம்.பி. ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டுக்கு உள்ளானவர் என்றும், வன்னியில் 600 பொலிஸார் கொல்லப்படுவதற்கு இவரே காரணம் என்று கடந்த மே மாதம்

(12ஆம் பக்கம் பார்க்க)

TRUTH RIGHT CONDUCT PEACE LOVE NON VIOLENCE

பகவான்
ஸ்ரீ சத்ய சாயி பாபாவின்
97வது ஜெயந்தி மகோத்சவம்



நவம்பர் 23, புதன்கிழமை

சாயி மந்திர், கொழும்பு - 07
காலை 05.00 - 08.00
மாலை 06.00 - 07.30

சிவானந்த நிலையம்,
சைவ மங்கையர் வித்தியாலயம்
கொழும்பு - 06
காலை 05.00 - 06.00
காலை 11.00 - 12.30

நவம்பர் 27, ஞாயிற்றுக்கிழமை

இராமகிருஷ்ண மண்டபம்,
கொழும்பு - 06
மாலை 04.30 - 08.00

அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்தி,
கொழும்பு "சாயி மந்திர்"
22, பார்ன்ஸ் பிளேஸ், கொழும்பு - 07
தொலைபேசி: 0112687014
மின்னஞ்சல்: saimandircolombo@gmail.com

# உலகிலேயே ஒழுக்கமற்ற இராணுவமாக இலங்கை இராணுவத்தை பார்க்கிறோம்!

## கஜேந்திரன் தெரிவிப்பு



உலகிலேயே ஒழுக்கமற்ற இராணுவமாக தாம் இலங்கை இராணுவத்தையே பார்ப்பதாகவும், உலகில் எங்கும் எந்த இராணுவமும் உயிர்நீர்த்தவர்களின் உடலங்களைக் கிளறி எறியவில்லையெனவும் ஆனால் இலங்கை இராணுவம் அதனை முன்னெடுத்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளருமான செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களைப் புனரமைக்கும் பணிகள் தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள அரசியல் கட்சிகள் மற்றும் மாவீரர் பணிக்குழுவினர், பொதுமக்களின் பங்களிப்புடன் சிரமதான அடிப்படையில் புனரமைக்கப்பட்டுவருகின்றன.

அம்பாறை மாவட்ட கஞ்சி குடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லம் சிரமதானம் செய்து துப்புரவாக்கப்பட்டது.

இதன்போது அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளருமான செ.கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன், தவிசாளர்கள் உள்ளிட்ட குழுவினர் அங்கு பிரசன்னமாகியிருந்தனர். மாவீரர் பணிக்குழுவினரும், பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது திருக்கோவில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து சிரமதானப் பணியை இடைநிறுத்துமாறு கோரினர். இந்தக் காணி சிரமதானம் காரணமாக ஏதாவது இனப் பிரச்சினை எழும் எனவும் அதனால் இந்தப் பணியை நிறுத்துமாறும் பொலிஸார் கோரினர்.

எனினும் 'இது எமது மண்ணுக்காக உயிர் நீத்த உறவுகளை நினைவு கூருகின்ற நிகழ்வு. இது எமது உரிமை. இதில் எந்தப் பிரச்சினையும் வரப்போவதில்லை' என்று மக்கள் பிரதிநிதிகள் கூறியமையையடுத்து பொலிஸார் அங்கிருந்து சென் றர். அதனைத் தொடர்ந்து சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்த கஜேந்திரன் –

இந்த மாதம் தமிழர்களின் உரிமைக்காகப் போராடி உயிர்நீர்த்த மாவீரர்களை நினைவுகூரும் புனிதமான மாதம். 2009 ஆம் ஆண்டு வரையில் இந்த நினைவேந்தல்கள் பாரியளவில் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டுவந்தன.

2009 மே 18 இல் எமது உரிமைப் போராட்டம் இன அழிப்பின் ஊடாக முடிவுறுத்தப்பட்ட நிலையில் வடக்குக் கிழக்கிலிருந்த அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலுமிருந்தவித்துடல்கள் இராணுவத்தால் கிளறி எறியப்பட்டன. அதன் பின்னர் பல துயிலும் இல்லங்களில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர், பல துயிலுமில்லங்கள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கமுடியாத வகையில் இலங்கை அரசும் அதன் இராணுவமும் புலனாய்வுத்துறையினரும் நெருக்கடிகளை வழங்கிவருகின்றனர். அதனையும் தாண்டி எமது புனிதர்களின் நினைவுகூருவதை எமது மக்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

27 ஆம் திகதி மாவீரர்களை நினைவுகூரும் வகையில் துயிலும் இல்லங்கள் பல்வேறுதரப்பினராலும் தூய்மைப் படுத்தப்பட்டுவருகின்றது. 21 ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதி வரையில் மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்படும்.

சகல தடைகளையும் தாண்டி நினைவேந்தல் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு, தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்காகவும் நிரந்தர அரசியல் தீர்வுக்காகவும் உயிர்த் தியாகம் செய்துள்ளார்கள். அந்த இலட்சியத்தை நாங்கள் முன்கொண்டுசெல்வோம் என்பதை உறுதிகொள்ளும் நாளாக இந்த நாள் அமையவேண்டும்.

21ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதி வரையில் மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்படும்போது அந்த வாரத்தை முன்னிட்டு தமிழர் தாயகப்பகுதியில் வீதியோரங்களைத் தூய்மைப்படுத்தி புனிதர்களின் நினைவு தினத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கவேண்டும்.

இன்று பல மாவீரர் துயிலும் இல்லங்களில் இராணுவம் குடிகொண்டுள்ளது. வடக்கு கிழக்கில் உள்ள பல மாவீரர் துயிலும் இல்லங்களில் இராணுவத்தினர் குடிகொண்டுள்ளனர். அந்த இடங்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேற வேண்டும். இது இராணுவ ஒழுக்கமற்ற நடவடிக்கையையே காட்டுகின்றது. இறந்தவர்களின் உடலங்களைக் கிளறி எறிந்ததாக உலகில் எந்த இராணுவமும் செய்ததாக நாங்கள் அறியவில்லை.

பிரித்தானியா இந்த நாட்டை 150 வருடத்திற்கு மேல் அடிமைப்படுத்தி வைத்திருந்திருந்தாலும் கூட தோற்கடித்த எமது மன்னர்களின் சிலைகளைக்கூடி நிறுவி வைத்துள்ளார்கள்.யுத்த மரபுகளை மீறியே யுத்ததினை செய்தது.யுத்தம் முடிந்த பின்னர் கூட உயிரிழந்தவர்களை நினைவுகூரமுடியாத வகையிலான அநாகரிமான செயற்பாடுகளையே முன்னெடுத்துவருகின்றனர்.

இன்றும் துயிலும் இல்லங்களுக்கு மேல் அவர்கள் இருப்பதன் மூலம் உலகிலேயே ஒழுக்கம் அற்ற, நெறிகெட்ட இராணுவம் என்பதை மீண்டும்மீண்டும் வெளிப்படுத்திவருகின்றனர்.இந்த நிலைமை மாறவேண்டும்.சர்வதேச சமூகம் இவர்கள் மீது அழுத் தங்களைப் பிரயோகித்துதுயிலும் இல்லங்களிலிருந்து இராணுவம் வெளியேற்ற வேண்டும். தமிழினம் இந்தத் தீவிலே வாழும் வரைக்கும் நினைவேந்தல்கள் தொடர்ந்து நடைபெற வேண்டும். வெறு மனே விளக்கேற்றுவதும் மாலைபோடுவதும் கடமையல்ல. அவர்களின் இலட்சியத்தை அடைவதற்கு ஒவ்வொருவரும் நேர்மையாக செயற்பட வேண்டும். ஒருபுறம் அரசாங்கத்தின் தோளில் கைகளைப்போட்டுக்கொண்டு, அவர்கள் போடும் எலும்புத்துண்டுகளுக்காக தமிழ்த் தேசியத்தை நாங்கள் விற்க கூடாது. நாங்கள் அனைவரும் அந்த இலட்சியத்தை அடைவதற்காக ஒன்றுபட்டு செயலாற்றவேண்டும். – என்றார்.

# பொருளாதார நெருக்கடியான சூழலில் ஆதனவரி அறவீடு செய்வதை நிறுத்துக!

## கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் இளங்கோ கோரிக்கை



தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியான சூழலில் அதிகரித்துள்ள பொருள்கள் சேவைகள் விலையேற்றம் காரணமாக மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்த முடியாத நிலையில் உள்ள போது ஆதனவரியை செலுத்துமாறு கரைச்சி பிரதேச சபை அழுத்தம் கொடுப்பது மக்களை மேலும் நெருக்கடிக்குள் உள்ளாக்குவதாகும். எனவே இந்தச் செயற்பாட்டை நிறுத்துமாறு கரைச்சி பிரதேச சபையின் சமத்துவக் கட்சியின் உறுப்பினர் இ.இளங்கோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போது –

கரைச்சி பிரதேச சபையில் அதிகரித்த ஆதன வரி தொடர்பில் நாம் தொடர்ந்தும் எமது ஆட்சேபனையையும், எதிர்ப்பையும் தெரிவித்து வருகின்றோம்.

கரைச்சி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மக்களில் ஒரு குறிப்பிட்ட சொற்ப சதவீத மக்களைத் தவிர பெரும்பாலானவர்கள் பொருளாதாரத்தில் மேம்பாடுடையவர்களாக இல்லை. எனவே மக்கள் அவ்வாறான நிலையில் இருக்கும் போது அந்த மக்களிடம் ஆதனவரியை செலுத்துமாறு நிர்ப்பந்தம் செய்வதும் இந்தக் கால சூழலில் மிகவும் பொருத்தமற்ற செயற்பாடு.

மூன்று வேளை உணவுக்கே தினமும் போராடுகின்ற நிலையில் மக்கள் உள்ள போது அவர்களை நாமும் நெருக்கடிக்குள் தள்ளவிடக் கூடாது எனத் தெரிவித்த அவர் நாட்டில் தற்போது அனைத்து வரிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

புதிய புதிய வரிகள் மக்கள் மீது சுமத்தப்பட்டுவருகின்றன. இந்த நிலையில் கரைச்சி பிரதேச சபையும் தனது அதிகரித்த ஆதனவரியை செலுத்துமாறு மக்களை நிர்ப்பந்தம் செய்வதை நிறுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மாணவர்களுக்காக இலவசமான கருத்தரங்கு கொட்டகலையில்!



கொட்டகலை பிரதேச சபையின் தலைவர் ராஜமணி பிரசாந்த்தின் ஏற்பாட்டில் இலவச கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

கீழ் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொட்டக்கலை ஸ்ரீ முத்து விநாயகர் கோவில் மண்டபத்தில் தரம் ஐந்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.

இதன் போது நுவரெலியா கல்வி வலயத்தின் உப பணிப்பாளர் மற்றும் கொட்டகலை பிரதேச சபையின் உப தலைவர் மற்றும் உறுப்பினர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# புலத்சிங்கள பொலிஸ் கூண்டிலிருந்த தனது எஜமானருக்கு பிணை வழங்க உதவிய நாய்!





பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தனது எஜமானரைத் தேடி பொலிஸ் சிறைக் கூண்டுக்கு அருகில் சென்ற நாய் தொடர்பான சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளதாக புலத்சிங்கள பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் சிறைக் கூண்டுக்கு அருகில் நாய் ஒன்று நிற்பதைக் கண்ட பொலிஸார் அதனை விரட்டியுள்ளர். இருப்பினும் அந்த நாய் வெளியே செல்லாது பொலிஸ் நிலையத்துக்குள்ளே பதுங்கிருந்ததுள்ளது. இதனைக் கண்ட பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட போது, சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு பொலிஸ் சிறைக்கூண்டில் வைக்கப்பட்டிருந்த நபரின் வீட்டில் வளர்க்கப்பட்ட நாய் என்பது தெரியவந்துள்ளது.

புலத்சிங்கள பிரதேசத்தில் வைத்து சந்தேக நபரைக் கைது செய்து ஜீப்பில் அழைத்து வரும்போது குறித்த நாயும் பல கிலோ மீற்றருக்கும் மேலாக ஜீப்பைப் பின்தொடர்ந்து வந்திருந்தமையும் தெரிய வந்துள்ளது.

பின்னர் அந்த வளர்ப்பு நாய் இரும்புக் கம்பிகள் வழியாக எஜமானைப் பார்த்துக் கொண்டிருந்ததைப் பொலிஸார் கண்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ’பட்ஜெட்’ வாக்கெடுப்பு இன்று

கடந்த 14ஆம் திகதி நிதி அமைச்சர் என்ற முறையில் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த வரவு – செலவுத் திட்டம் இன்று முதலாவது அமிலப் பரீட்சையை எதிர்கொள்கின்றது.

அதன் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று மாலை நடைபெறுகிறது. அதில் வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான இந்த அரசு கவிழ்ந்ததாக அர்த்தப்படும். ஆனால் அதற்கு வாய்ப்புகள் – சந்தர்ப்பம் – இல்லை என்பதுதான் கள நிலைவரம்.

நேற்று மாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடிய அமைச்சரவை இன்றைய வாக்கெடுப்பை எப்படி வெற்றிகரமாக நிறைவேற்றுவது என்பதற்கான தந்திரோபாயம் குறித்து விவாதித்தது எனத் தெரிகிறது.

எனினும் ஆளும் பொதுஜன பெரமுன நிபந்தனையின்றி இந்த வரவு – செலவுத் திட்டத்தை ஆதரிப்பது என்று தீர்மானித்து இருப்பதால் ரணில் – தினேஷ் குணவர்தன அரசை பொறுத்தவரை இது விக்கனமின்றி நிறைவேறும் என நம்ப முடியும்.

இந்த வரவு – செலவு திட்டத்தைப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பது எனத் தீர்மானித்துள்ளது. ஜே.வி.பி. மற்றும் ஆளும் மொட்டு கட்சியிலிருந்து வெளியேறித் தனித்தனிக் குழுக்களாக இயங்கும் அணிகள் எல்லாம் எதிர்த்து வாக்களித்தாலும் வரவு – செலவு திட்டத்தை தோற்கடிப்பதற்கான வாய்ப்புகள் மிக மிகக் குறைவு. நாடாளுமன்ற ஆசனங்களின் அட்சரகணித எண்ணிக்கை அப்படித்தான் அரசுக்குச் சாதகமாக வலிமையாக உள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் எதிர்த்து வாக்களிக்கப் போவதாக அறிவித்திருக்கின்றது. ஆனால் இந்த விடயத்தில் அந்தக் கட்சியின் 14 எம்.பிகளில் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன, செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோரைத் தவிர, எத்தனை பேர் அந்த இருவருடனும் சேர்ந்து எதிர்த்து வாக்களிக்க மிஞ்சுவர் என்பதை இன்று மாலைதான் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு இன்று காலை கூடுகின்றது. கூடி ஒரு முடிவு எடுத்த பின்னர்தான் வரவு – செலவுத் திட்ட விவாத உரையில் பங்குபற்றுவேன் என்று சுமந்திரன் அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டார். தான் ஒரு மாதிரி பேச, நாடாளுமன்ற குழு அதற்கு மாறாக முடிவெடுத்துவிட்டால் தனது நிலைப்பாடு திரிசங்கு சொர்க்கமாகிவிடும் என்ற அனுபவம் அவருக்கு.

பெரும்பாலும் இரண்டாவது வாசிப்பின் போது வாக்களிக்காமல் நடுநிலை வகிக்கும் முடிவைக் கூட்டமைப்பு எடுக்கக் கூடும்.

வரும் எட்டாம் திகதி நடைபெறும் மூன்றாவது வாசிப்பிலும் அதே முடிவைக் கூட்டமைப்பு பின்பற்றக் கூடும். ஆனால் இடையில், குழுநிலை விவாதத்தின் போது பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீட்டை மட்டும் தெளிவாக எதிர்த்து வாக்களித்து, பாதுகாப்பு அமைச்சுக்கான அதிக நிதி ஒதுக்கீட்டை எதிர்க்கிறோம் என்ற கொள்கை நிலைப்பாட்டை அடையாளப்படுத்திவிட்டு, மிகுதி வாக்களிப்புகளை கூட்டமைப்பு தவிர்க்கக் கூடும்.

எது, எப்படி என்றாலும் இன்று காலை நடக்கும் நாடாளுமன்ற குழுவில்தான் கூட்டமைப்பின் இறுதித் தீர்மானம் எட்டப்படும்.

## ஏப்ரல் மாதத்திற்குப் பின்னரே 2022 சாதாரணதரப் பரீட்சை!

### கல்வி அமைச்சர் அறிவிப்பு



2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் நடத்தப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்து தெரிவித்த போதே அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இந்த அறிவிப்பை விடுத்தார்

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையை அடுத்த வருடம் ஏப்ரலில் நடத்த எதிர்பார்த்தாலும், க.பொ.த உயர்தரப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளமையால், மேலும் தாமதங்கள் தவிர்க்க முடியாதவை என்றார்.

பல தரப்பினரின் கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்கத் தீர்மானித்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சை ஜனவரி 17 ஆம் திகதி ஆரம்பமாகும் அதேவேளை புலமைப்பரிசில் பரீட்சை டிசெம்பர் 18ஆம் திகதி நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

## உறவுகளுக்கு வணக்கம் செலுத்துவதற்கான சந்தர்ப்பத்தை இந்த அரசு வழங்க வேண்டும்

### கலையரசன் கோரிக்கை




மரணித்த எமது உறவுகளுக்கு வணக்கம் செலுத்துகின்ற அந்தக் கடமையைச் செய்கின்ற சந்தர்ப்பத்தை இந்த அரசாங்கம் மக்களுக்கு வழங்க வேண்டும். கடந்த காலத்தில் இருந்தாற்போல் ஓர் அடக்குமுறையான நிலைமை தற்போது இல்லாதுவிட்டாலும், இதே நிலைமை தொடர்ச்சியாக நிலவ வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

மாவீரர் நினைவேந்தலுக்காக அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லத்தில் துப்புரவுப் பணியை மேற்கொள்ளும் போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

அம்பாறை மாவட்டத்திலே இருக்கம் ஒரே ஒரு மாவீரர் துயிலுமில்லமாக இந்தக் கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லம் திகழ்கின்றது. எங்களுடைய தமிழ்த் தேசியத்திலே பற்றுக்கொண்ட, தேசியத்தோடு பயணிக்கின்ற அனைவரும் கட்சி பேதங்களின்றி இந்த இடத்தைத் துப்புரவு செய்து கொண்டிருக்கின்றோம்.

எமது மரணித்த மாவீரர்களுக்குச் சுடரேற்றி எங்களது நன்றிக் கடனை அகவணக்கமாகச் செலுத்துகின்ற எங்களுடைய பண்பாட்டு ரீதியான கலாசாரத்தைத் தமிழ் மக்கள் காலாகாலமாகச் செய்து வருகின்றார்கள். ஆனால் கடந்த ஒரு சில வருடங்களாக அவ்வாறான வணக்க நிகழ்வுகளைச் செய்ய முடியாதளவிற்கு அப்போதிருந்த அரசாங்கம் தடுத்து நிறுத்தியது. ஆனால் தற்போது அந்தச் சந்தர்ப்பம் அமைந்திருக்கின்றது என்றே சொல்ல வேண்டும்.

உண்மையிலே எமது உயிர்களுக்குரிய நன்றிக்கடனைச் செய்ய வேண்டியது எமது தலையாய கடமை. இந்த நினைவேந்தல் நிகழ்வை எமது மக்கள் உணர்வு பூர்வமாகத் தீபமேற்றி வணக்கம் செலுத்தி அனுஷ்டித்து வருகின்றார்கள். அந்த அடிப்படையில் இந்தக் கஞ்சிக்குடிச்சாறு மாவீரர் துயலுமில்லத்தில் மாவீரர் நிரைனவேந்தலைச் செய்வதற்கான ஏற் பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலத்தில் இருந்தாற்போல் ஓர் அடக்குமுறையான நிலைமை தற்காலத்தில் இல்லாதுவிட்டாலும், இதே நிலைமை தொடர்ச்சியாக நிலவ வேண்டும். அத்துடன் எமது இந்த இடங்கள் தொடர்ச்சியாகப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியதும், மாவீரர்களை நினைவுகூருகின்ற இடமாகவும் இருக்க வேண்டும் என்பதில் நாங்கள் மிகவும் உறுதியாக இருக்கின்றோம்.

எனவே மரணித்த எமது உறவுகளுக்கு வணக்கம் செலுத்துகின்ற அந்தக் கடமையைச் செய்கின்ற சந்தர்ப்பத்தை இந்த அரசாங்கம் மக்களுக்கு வழங்க வேண்டும். இதனை மறுதளிக்கின்ற செயற்பாடுகளைக் கடந்த கால அரசாங்கம் போல மேற்கொள்ளக் கூடாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். – என்று தெரிவித்தார்.

## துரித உணவின் விலை உயர்வால் நன்மைகள்!

சந்தையில் துரித உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்புடன் சிறுவர்கள் அதனைப் பயன்படுத்துவது குறைந்துள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊட்டச்சத்து பிரிவின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

துரித உணவுப் பாவனை குறைவடைந்துள்ள நிலையில், நீரிழிவு போன்ற தொற்றாத நோய்களால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையில் பாரியளவில் குறைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் ஊட்டச்சத்து மற்றும் உணவு கிடைக்கும் தன்மை தொடர்பான தரவுகளை சேகரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதி செய்யும் நோக்கில், இந்ததரவு சேகரிப்பு நடவடிக்கைகள் அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022



“மரங்களைக் காற்றைச் சலவை செய்யும் இயந்திரங்களாகவும், குளிர்விக்கும் பதனப்படுத்திகளாகவும் சொல்லித்தரும் அறிவியலும், உயிர்காக்கும் மரங்களைப் பணங்காய்ச்சி மரங்களாகப் போதிக்கும் பொருளியலும் ஆதிக்கம் பெற்றுள்ள நிலையில் மரங்களுக்கும் எமக்கும் இடையிலான பண்பாட்டு உறவை மீட்டுருவாக்கம் செய்வது அவசியம் ஆகும். இந்தப் பண்பாட்டு உறவே மரங்கள் மீதான பற்றுதலை வளர்க்கும். ”

**- பொ. ஐங்கரநேசன்-**
**தலைவர் - தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம்**

# தனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை அரச கொள்கையாக்க ஜனாதிபதி முயற்சி!

## சரித ஹேரத் சாடல்



இலாபமடையும் அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்த வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி தனது தனிப்பட்ட விருப்பங்களை அரச கொள்கையாக செயற்படுத்த முயற்சிக்கிறார்.

வரவு – செலவுத் திட்டத்தின் குறைபாடுகளை திருத்திக்கொள்ளாவிட்டால் பாதீட்டுக்கு எதிராக வாக்களிப்போம் என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பு நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் காங்கிரஸ் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு –

நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் பல விடயங்களுக்கு நேரடியாக எதிர்ப்பை வெளிப்படுத்துவோம். சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஒருசில விடயங்களில் திருத்தம் மேற்கொள்ளாவிட்டால், முழு வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராகவும் வாக்களிப்போம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தால் ஏற்பட்ட விளைவுகளை முன்னிலைப்படுத்தி வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக பொருளாதாரப் பாதிப்புக்கு அப்பாற்பட்ட விடயங்களை செயற்படுத்திக்கொள்ள அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

ஆகவே, இந்த வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கைப் பிரகடனம் தவறு என்பதை சுட்டிக்காட்டும் வகையில் அவர் கொள்கைப் பிரகடனத்தில் பல விடயங்களை உள்ளடக்கியிருந்தார்.

நட்டமடையும் அரச நிறுவனங்களைத் தொடர்ந்து அரசு நிர்வகிப்பது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட வேண்டும். ஆகவே, நட்டமடையும் அரச நிறுவனங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து கடந்த ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து நட்டமடையும் அரச நிறுவனங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

தற்போது 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டத்தை கடந்த 14 ஆம் திகதி சமர்ப்பித்து நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி எந்த விடயத்திலும் இலாபமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது தொடர்பில் குறிப்பிடவில்லை.

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதை விடுத்து இலாபமடையும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த ஜனாதிபதி அவதானம் செலுத்தியுள்ளார்.

லங்கா ரெலிகொம் நிறுவனம், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆகிய அரச நிறுவனங்கள் இலாபமடைகின்றன. இந்த நிறுவனங்களை தனியார் மயப்படுத்த வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு மக்களாணை கிடையாது. நாடாளுமன்றத்தின் மக்களாணை தற்போது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

134 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதியாகவே ஜனாதிபதி காணப்படுகிறார். ஜனாதிபதியின் தனிப்பட்ட விருப்பங்கள் அரச கொள்கையாக மாற்றமடையும்போது அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்.

வரவு – செலவுத் திட்டத்தில் காணப்படும் பிரதான குறைபாடுகளை இந்த வாரம் இடம்பெறும் குழுநிலை விவாதத்தின்போது சுட்டிக்காட்டுவோம். குறைகளைத் திருத்திக்கொள்ளாவிட்டால் வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிப்போம். – என்றார்.

# எரிபொருள்களின் விலைகளில் மாதத்துக்கொருமுறை திருத்தம்!

## அமைச்சர் காஞ்சன தகவல்

எரிபொருள் விலை சூத்திரத்திற்கமைய மாதத்தில் ஒரு முறை விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இது தொடர்பான யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பெற்றோலிய விற்பனையாளர்கள் சங்கத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வு இடம்பெற்றது. இநத ;நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

எரிபொருள் விலை சூத்திரம் மாதத்துக்கு இரண்டு முறை, ஒவ்வொரு மாதமும் 1 மற்றும் 15 ஆம் திகதிகளில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இருப்பினும், விநியோகத்தர்களுக்கு நிதி இழப்பு ஏற்படும் என்பதால், இரண்டு நாள்களுக்கு முன்பு முற்பதிவு செய்யாமல் இருப்பது அவதானிக்கப்பட்டது.

எனவே, எரிபொருள் விலை சூத்திரத்தை மாதத்திற்கு ஒருமுறை அமுல்படுத்த முடிவு செய்துள்ளோம். இது தொடர்பான யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். – என்றார்.



# நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கண்காட்சி



யாழ்ப்பாணம், நவ. 22


சமூகத்தில் போசாக்கான உணவுகளை ஊக்குவித்தல் தொடர்பிலான கண்காட்சியொன்று நேற்றைய தினம் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது.

இந்தக் கண்காட்சியை யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி வைத்தியர் சுரேந்திரகுமார் ஆரம்பித்து வைத்திருந்தார்.

இந்தக் கண்காட்சி போசாக்கு மட்டம் குழந்தைகள், சிறுவர்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் ஆகியோரிடம் குறைவடைந்து செல்வதை ஊக்குவிக்கும் முகமாகவும், இதனை ஊக்குவிக்க எமது பாரம்பரிய உணவுகள் மற்றும் வீட்டுத்தோட்டங்களில் இருந்து பெறப்படும் போசாக்கான காய்கறிகள் மூலம் சக்தியைப் பெற்றுக் கொள்வதை விளிப்புணர்வூட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கண்காட்சியில் பல்வேறு உணவுப் பொருள்கள், விளிப்புணர்வுப் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன் கண்காட்சியை சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





## FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

# எல்லை தாண்டிய பயங்கரவாதத்தால் இந்தியா மோசமாக பாதிக்கப்பட்டது

## ஐ.நாவுக்கான நிரந்தரப் பிரதிநிதி ருசிரா காம்போஜ் விளக்கம்




எல்லை தாண்டிய பயங்கரவாதத்தால் இந்தியா பாதிக்கப்பட்டது என்ற உண்மையை உலகிற்குச் சொல்ல வேண்டும், இதனால் சர்வதேச சமூகம் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று நியூயோர்க்கில் உள்ள ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி ருசிரா காம்போஜ் **The Print** இடம் கூறினார்.

கடந்த மாதம் இந்தியாவில் நடந்த ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலின் பயங்கரவாத எதிர்ப்புக் குழுவின் சிறப்புக் கூட்டத்தைப் பற்றி விவாதிக்கும் ஒரு பிரத்தியேக நேர்காணலில், "காம்போஜ், எல்லை தாண்டிய பயங்கரவாதத்தின் தாக்கத்திற்கு ஆளான நமது கதையை சர்வதேச சமூகத்தின் முன், அது நமது கவலைகளுக்கு சமமான கவனம் செலுத்தும் வகையில் வெளிக்கொணரவே டியது அவசியம்" – என்று கூறினார்.

தற்போது குழுவின் தலைவராக இருக்கும் கம்போஜ், மும்பை மற்றும் டெல்லியில் நடந்த சிறப்புக் கூட்டம், குறிப்பிட்ட முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனெனில் கவுன்ஸில், 26/11 மும்பை தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியமையோடு உயிர் பிழைத்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் சாட்சியங்களையும் கண்டது என்று கூறினார்.

அவர்கள் தங்கள் அனுபவத்தின் கொடூரங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் பல கவுன்ஸில் உறுப்பினர்களின் நரம்புகளைத் தொட்டனர். பயங்கரவாதத் தாக்குதல்களின் தாக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கான அவர்களின் பின்னடைவை முன்னிலைப்படுத்தினர் என்று அவர் நியூயோர்க்கில் இருந்து கூறினார்.

### பயங்கரவாத நிதி கண்காணிப்பு அமைப்பு நல்ல வேலையைச் செய்துள்ளது



பாரிஸைத் தளமாகக் கொண்ட பயங்கரவாத நிதி கண்காணிப்பு அமைப்பான, நிதி நடவடிக்கை பணிக் குழுவின் **(FATF)** 'சாம்பல் பட்டியலில்' இருந்து பாகிஸ்தான் வெளியேறுவது குறித்த கேள்விக்கு – ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலின் சிறப்புக் கூட்டத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, காம்போஜ் பதிலளித்தார்.

"உலகளாவிய சிறந்த நடைமுறைகள் மற்றும் பணச் சலவை மோசடி எதிர்ப்பு மற்றும் பயங்கரவாத நிதியுதவி எதிர்ப்பு மூலம் பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடுவதில் உறுப்பு நாடுகளின் பொறுப்புணர்வை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை முன்னிலைப்படுத்தி, பிராந்தியங்கள் அல்லது அதிகார வரம்புகளைப் பொருட்படுத்தாமல், பயங்கரவாத நோக்கங்களுக்காக புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலின் ஈடுபாட்டை உயர்த்தி மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இக்கூட்டம் அவதானிக்கப்பட வேண்டும்" – என்றார்.




அவர் மேலும் கூறினார், இந்த வியத்தில் **FATF** நல்ல வேலையைச் செய்துள்ளது, மேலும் டெல்லி பிரகடனம் **FATF** இன் பங்களிப்பைக் கவனிக்கிறது – குறிப்பாக – மெய்நிகர் நாணயங்கள் மற்றும் புதிய கட்டண முறைகளின் அச்சுறுத்தலை நிவர்த்தி செய்வதில். என்றார் அவர்

ஐ.நாவின் சிறப்புக் கூட்டத்திற்குப் பிறகு டெல்லி பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது, அங்கு பயங்கரவாத எதிர்ப்பு நிதியுதவி நடவடிக்கைகளை உலகளாவிய முறையில் செயல்படுத்துவது தொடர்பான ய்புவீய் இன் பணிகளை உறுப்பு நாடுகள் பாராட்டின.

**FATF** மதிப்பீடு மற்றும் அதிகார வரம்புகளின் வகைப்பாடு ஆகியவை உறுப்பு நாடுகளை தங்கள் பிராந்தியங்களில் இருந்து எழும் பயங்கரவாத நிதியளிப்பு அச்சுறுத்தலைத் தடுக்க சரிபார்க்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க கட்டாயப்படுத்துவதில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது. **FATF** உடனான தனது ஒத்துழைப்பைத் தொடர குழு தீர்மானித்துள்ளது, மேலும் நாடு வருகைகள் மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளும் போது அவர்களின் நிபுணத்துவத்திலிருந்து பயனடையவும்

வாய்ப்புண்டு என்று கம்போஜ் கூறினார்.

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அக்டோபரில் **FATF** ன் "சாம்பல் பட்டியலில்" இருந்து பாகிஸ்தான் வெளியேறியது. **FATF**, நாட்டின் நிதி அமைப்பைக் கண்காணிக்கவும், பணமோசடி மற்றும் பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதியுதவி செய்வதை ஊக்குவிப்பதா என்பதைச் சரிபார்க்கவும் ஒரு நாடு சாம்பல் பட்டியல்' என்று அழைக்கப்படும் ஒரு தர நிலையின் கீழ் வைக்கப்படுகிறது.

**FATF** ன் பணியை ஆதரிப்பதில் சில பிரதிநிதிகளின் தடைகள் இருந்தபோதிலும், (ஐ.நா. சிறப்பு) கூட்டம் பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்வதை எதிர்ப்பதில் அவர்களின் பணியை அங்கீகரித்ததையும் கம்போஜ் எடுத்துரைத்தார்.

மதிப்பு சேமித்து வைக்கப்பட்ட மற்றும் ப்ரீபெய்ட் கார்டுகள், மெய்நிகர் சொத்துக்கள், கிரிப்டோகரன்சிகள், நிதி திரட்டும் பயங்கரவாத குழுக்களின் க்ரவுட் ஃபண்டிங் தளங்கள் உள்ளிட்ட புதிய கட்டண முறைகளை தவறாகப் பயன்படுத்துவதை ஒடுக்குவதற்கான **FATF** பரிந்துரைகளை உறுப்பு நாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அது வலியுறுத்தியது.

### 'பயங்கரவாதம்' என்பதற்கு பொதுவான வரையறை எதுவும் உருவாக்கப்படாமை பரிதாபமே

பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கான பொதுவான உலகளாவிய வார்ப்புருவைக் கருதும் சர்வதேச பயங்கரவாதம் தொடர்பான விரிவான மாநாட்டை (சிசிஐடி) முன்கூட்டியே இறுதி செய்ய இந்தியா அழுத்தம் கொடுத்து வருகிறது.

ஐ.நா.வின் கீழ் **CCIT**யை ஏற்றுக்கொள்வது முதன்முதலில் இந்தியாவால் 1996 இல் முன்மொழியப்பட்டது. ஆனால் மாநாட்டில் வகுக்கப்பட்ட சில விதிகள் மீது பல நாடுகளின் எதிர்ப்பின் காரணமாக அது இருட்டடிப்பு நிலையில் உள்ளது.

எல்லை தாண்டிய பயங்கரவாத விவகாரத்தில் இந்தியா சிறப்பு கவனம் செலுத்தியுள்ளது. 2021 ஆம் ஆண்டில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலின் நிரந்தர மற்ற உறுப்பினர்களில் ஒன்றாக இந்தியா ஆனது முதல், மாநாட்டை ஏற்றுக்கொள்வதற்கு அது தொடர்ந்து துடுப்பாடி வருகிறது.

"**CCIT** பயங்கரவாதத்திற்கு எதிரான பிரச்சினையில் ஒரு விரிவான ஆனால் புறநிலை அணுகுமுறையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பயங்கரவாத அச்சுறுத்தலை பல தசாப்தங்களாக எதிர்கொண்ட பின்னரும் கூட, பயங்கரவாதத்தின் பொதுவான வரையறைக்கு எங்களால் உடன்பட முடியவில்லை என்பது ஒரு பரிதாபம், என்று கம்போஜ் வலியுறுத்தினார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்க அல்லது சில பயங்கரவாத செயல்களை ஆதரிப்பதன் மூலம் அவர்களின் மெத்தனத்தை நியாயப்படுத்துவதன் மூலம் இந்த தெளிவின்மையிலிருந்து பயனடைய விரும்பும் சந்தர்ப்பவாத நாடுகளால் பயங்கரவாதத்தின் பொதுவான வரையறையின் பற்றாக்குறை பயன்படுத்தப்படுகிறது என்று அவர் மேலும் கூறினார்.

எவ்வாறாயினும், தூதுவர், **CCIT** என்பது உறுப்பு மாநிலத்தால் இயக்கப்படும் செயல்முறையாகும். மேலும் இது நேரத்தை எடுத்துக்கொள்ளும். முக்கியமான வியம் என்னவென்றால், இந்தப் பிரச்சினையில் நாம் தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், ஒருமித்த கருத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் செயல்படுவதும் ஆகும். டெல்லி பிரகடனம் இந்த பிரச்சினையில் ஒருமித்த கருத்தை அடைய உறுப்பு நாடுகளின் முயற்சிகளை கவனத்தில் கொள்கிறது.

டெல்லி பிரகடனம், பயங்கரவாதிகள் மற்றும் பயங்கரவாத குழுக்களின் புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான அச்சுறுத்தலைக் கணக்கில் எடுத்துக்கொள்கிறது – எல்லை தாண்டிய பயங்கரவாத அச்சுறுத்தல் உட்பட, இதை வெளிப்படையாகக் குறிப்பிடாமல் என்று கம்போஜ் கூறினார்.

அவர் மேலும் கூறினார், இருப்பினும், இந்த அச்சுறுத்தலைக் கையாள்வதில் ஏதேனும் தனித்தன்மை இருப்பதாக யாரும் எண்ணக்கூடாது. உண்மையில், டில்லிப் பிரகடனம் உறுப்பு நாடுகளை பயங்கரவாதிகள் மற்றும் பயங்கரவாத குழுக்களுக்கு எந்தவிதமான ஆதரவையும் வழங்குவதைத் தவிர்க்குமாறு தெளிவாக எச்சரிக்கிறது, மேலும் அவர்களின் சர்வதேச பயங்கரவாத எதிர்ப்புக் கடமைகளை நிறைவேற்ற அவர்களை வலியுறுத்துகிறது."

**(மூலம்: "த பிரிண்ட்')**

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 188

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!


## தமிழ் மக்களுக்காக உயிரைக் கொடுத்த போராளிகள்

ஜனாதிபதி ரணில் பங்கேற்ற வவுனியாக் கூட்டத்தில் சுமந்திரன் மிக நறுக்காக சில வார்த்தைகளில் சமாதான பேச்சுவார்த்தைகளின் காலங்களில் நடந்த தேர்தலில் ரணில் சமஷ்டி அமைப்பை முன்வைத்துப் போட்டியிட்டார். பின் நல்லாட்சி காலங்களில் அதனை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட அரசமைப்புக்கு ஆதரவாக இருந்தார். ஆனால் அவருக்கு ஜனாதிபதி தேர்தலில் குழி பறித்த டிரான் அலஸ் போன்றோர் அமைச்சர்களாக அவருடன் கூட இருக்கின்றனர் என்ற பின்னணிகள் நாசூக்காக அவருக்கு விளங்கப்படுத்தப்பட்டன என்ற கிசுகிசுப்புகள் ஊடகங்களில் எழுந்தன.

ரணில் இன்னும் அரசியல்வாதியே ஒழிய தேசிய தந்தையாக வளரவில்லை. இன்றும் அவரது முன்னோடிகள் டி.எஸ்.சேனநாயக,ஜே. ஆர்.ஜெயவர்த்தனா நாட்டிற்காகக் கடைப்பிடித்த கொள்கைகளிலேயே மதிப்பு வைத்திருப்பவர். அதேசமயம் தற்சமய சூழ்நிலைகளில் மயிர் இழைகளில் தனது ஆதரவுகளுக்காக தொங்கிக் கொண்டு சாம்ஸன் – டிலைலா கதைகளின் கதாநாயகனை நினைவூட்டி, கரணம் தப்பினால் மரணம் என்ற நிலையில் ஊடாடுகிறார். ஆதலால் அரசியல்வாதியின் சிந்தனைப் போக்குகளில் இருந்து அவர் வெளிவருவதற்கான சாத்திய கூறுகள் குறைவே.

மிக அண்மைக் காலங்களில் கஜேந்திர குமார், இறந்துவிட்ட எல்லாப் போராளிகளையும் உள்ளடக்கி மாவீரர்களின் நாள்களில், மறைவு தினங்களில் நினைவு கூர வேண்டும், அப்படியாயின் அரசோ இராணுவமோ அந்த நிகழ்வுகள் விடுதலைப் புலிகளை மாத்திரம் நினைவு கூருவதாகக் கொள்ள முடியாது, இறந்தவர் யாவரையும் நினைவு கொள்ள உரிமைகள் உண்டு எனப் பேசிய செய்திகள் வந்ததும், தமிழீழ் மாவீரர் பணிமனைக்காக வெளியிடப்படும் அறிக்கையில், மாவீரர் பட்டியலில் இடைச் செருகல்கள் வேண்டாமெனக் காக்கா அண்ணன் தெரிவித்த கருத்துகள் வெளியாகின.

உலகில் ஒழுக்கத்திற்கு உதாரணமாக அமைப்பாக குறிப்பிடுவது விடுதலை புலிகளைத்தான். புகைத்தல் உட்பட போதைப் பொருள் பாவனை, மது போன்ற விடயங்களில் அவற்றைத் தவிர்த்துக் கண்டிப்பாக இருப்பது புலிகளின் வரலாறு. அவர்களின் ஒழுக்கம், தலைமைக்கு கட்டுப்படல் போன்ற விடயங்கள் உலகறிந்தவை. அவ்வாறு இருக்கையில், ஏனையவர்களை இந்த பட்டியலில் இணைக்க முயல்வது விடுதலைப் போராட்டத்தின் அரிச்சுவடியை கூட இவர்கள் கற்க முனையவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது. விடுதலை புலிகளைத் தவிர ஈரோஸ் இயக்கத்தவர் 266 பேரும், தனிக்குழுவாக 10 பேரும், மாவீரர் பணிமனையின் மாவீரர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர் எனவும் காக்கா அண்ணனின் அறிக்கை குறிப்பிடுகிறது. காலைக்கதிரின் 21.11.2022 பதிப்பில் அந்த 10 பேரின் பெயர்களும் அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டு, எவ்வித அரசியலை முன்னெடுப்பதற்காக கஜேந்திர குமார் இவற்றை முன் வைக்கிறார் என தெரிவித்திருப்பதாலும் நானும் அவற்றை மீளப்பதிவதை தவிர்க்கிறேன்.



இதே பத்திரிகையில், மாவீரர் தினக் கட்டுரையாக ஏன் விடுதலைப் போராளிகள் யாவரும் தமிழ் மக்களால் குழு நிலைகளில் இன்றி, ஒற்றுமையாக நினைவு கூரப்பட வேண்டும் எனப் பதிந்திருந்தேன். அது தமிழ் மக்கள் ஒற்றுமையாக, ஒன்றிணைந்து, உணர்வு பூர்வமாக, இவர்கள் யாபேரும் விடுதலையில் மடிந்தவர்கள், மாத்தையாவும் அவரது சகாக்களும் கூட என்ற அடிப்படையில் எழுதி இருந்தேன். கஜேந்திரகுமார் அந்த உணர்வில் நினைவு கூரப்பட வேண்டும் என்ற அர்த்தத்தில் அல்லாது, இப்படிச் செய்தால் சட்டத்தின் முன்னே அது மாவீரர்களை – அதாவது விடுதலை புலிகளை – மாத்திரம் நினைவு கூர்வதாகாது என்கிறார். இங்கு சட்டமும் அரசியலும் சேர்ந்து இயங்குவதாகக் கருதுகிறேன். அவை உணர்வு பூர்வமான, மனசுத்தியான அனுஷ்டிப்புகள் அல்ல.

இவற்றைப் படித்த போது, கறுப்பு இனத்தவரின் மனித உரிமைகளை, அவர்களை மனிதர்களாகவே மதியாமல், அடிமைகளாக நடத்திய கொடூரங்களை களைந்தறிவதற்காக ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க காங்கிரஸில் மிகச் சிறிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றிய அடிமை நீக்கத்திற்கான சட்டம் அதன் தென் மாநிலங்களில் கிளர்ச்சியை ஏற்படுத்தி, அரசுக்கு எதிரான நீண்ட போரைத் தோற்றுவித்தமை நினைவுக்கு வந்தது.

அந்தப் போரில் பென்சில்வேனியா மாநிலத்தில் இறந்த படையினரை (அது அரசுப் படைகள், கிளர்ச்சியாளர்கள் இரு பகுதியினரையும் உள்ளடக்கியது) அடக்கம் செய்த வைபவத்தில் கெட்டிஸ்பேக் மயான பூமியில் ஆபிரகாம் லிங்கன் ஆற்றிய மிகவும் சுருக்கமான – 272 வார்த்தைகளை கொண்ட – உரை. சரித்திரம் முக்கியத்துவம் வாய்ந்து, சரித்திரத்தில் அழியாத இடம் பெற்றிருக்கும் வாசகங்களைக் கொண்டது. ஜனாதிபதியாக இருந்தாலும் ஆபிரகாம் லிங்கனைப் பேச்சாளராக கிளர்ச்சிக்காரர்கள் அந்த நிகழ்வுக்கு அழைக்க விரும்பவில்லை. ஸ்டீபன் டக்ளஸ் என்ற லிங்கனின் எதிராளியை, அவரது மனைவியின் உறவினர் தென்மாநிலத்தைச் சேர்ந்தவரே பிரதம பேச்சாளராக்க வேண்டும் என்று கேட்டாலும், லிங்கன் ஜனாதிபதியாக பதவி வகித்தமையால் அவர் பிரதம பேச்சாளரானார். ஆக், நான்கே நான்கு நிமிடங்களில் அவர் பேசிவிட்டு அமர்ந்ததை பலர் காணவில்லை. ஆனால் ஸ்டீபன் டக்ளஸோ மணிக் கணக்கில் பேசினார்.

ஆனால் நிலைப்பது குறல்கள் சொல்லும் தத்துவங்களை நிலையாக்கும் சிறிய வசனங்கள்தான். அவர் பேசியதின் சாரம் தமிழ் மக்கள் ஈடுபட்டிருக்கும் போராட்டத்திற்கும் பொருந்துவதால் குறிக்கிறேன். லிங்கன் இதனை நிகழ்த்திய திகதி 19 நவம்பர் 1863. முதலில் அதன் ஆங்கில வடிவத்தை தருகிறேன்.

Four score and seven years ago our fathers brought forth on this continent, a new nation, conceived in Liberty, and dedicated to the proposition that all men are created equal.

Now we are engaged in a great civil war, testing whether that nation, or any nation so conceived and so dedicated, can long endure. We are met on a great battle‡field of that war. We have come to dedicate a portion of that field, as a final resting place for those who here gave their lives that that nation might live. It is altogether fitting and proper that we should do this.

But, in a larger sense, we can not dedicate - we can not consecrate - we can not hallow - this ground. The brave men, living and dead, who struggled here, have consecrated it, far above our poor power to add or detract. The world will little note, nor long remember what we say here, but it can never forget what they did here. It is for us the living, rather, to be dedicated here to the unfinished work which they who fought here have thus far so nobly advanced. It is rather for us to be here dedicated to the great task remaining before us - that from these honored dead we take increased devotion to that cause for which they gave the last full measure of devotion - that we here highly resolve that these dead shall not have died in vain - that this nation, under God, shall have a new birth of freedom -and that government of the people, by the people, for the people, shall not perish from the earth.

Abraham Lincoln
November 19, 1863

இனி இப்பேச்சின் தமிழாக்கத்தைப் பார்ப்போம்.

'407 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த கண்டத்தில் எங்களது மூதாதையர் புதிய தேசம் ஒன்றை சுதந்திரத்திற்காகவும், எல்லா மனிதரும் சமத்துவமானவர்கள் என்ற புனிதத்துவத்திலே உருவாக்கினர்.

அப்படியாக உருவாக்கப்பட்ட தேசம் அன்றில் அந்த அடிப்படைகளைக் கொண்ட எந்த தேசமோ அந்த அர்ப்பணிப்புகளே நிலைத்து நிற்குமா என்பதற்கான பெரும் போரில் நாம் ஈடுபட்டு இருக்கிறோம். அதன் ஒரு பெரிய போர்க்களத்தின் ஒரு பகுதியை, அந்தத் தேசம் நிலைத்து நிற்பதற்குக் கடைசி வரையும் போராடி, அதற்காக உயிர் நீத்தவர்களின் கடைசி உறக்கத்திற்காக இடம் பெற வந்திருக்கிறோம். அதை நாங்கள் செய்வது பொருத்தமானது. ஆனால் விசாலமாக இதை பார்த்தால், இந்த மண்ணை நாங்கள் அவர்களுக்கு அர்ப்பணிக்க முடியாது. இங்கு போராடி இறந்தோ அன்றில் இருக்கும் அந்த மாவீரர்கள் தங்களது தியாகங்களால் அதனை எப்பொழுதோ தங்களுக்காகச் சமர்ப்பணம் செய்து விட்டார்கள். அந்த அர்ப்பணிப்பை நாங்கள் குறைக்கவோ மேலோங்கவோ செய்ய முடியாது.

நாங்கள் இங்கு சொல்பவற்றை உலகம் கண்டு கொள்ளும் என்றோ அன்றில் மறந்து விடாது எனவோ கூற முடியாது. ஆனால் இந்த மாவீரர்கள் செய்த உன்னதமான தியாகங்கள், அர்ப்பணிப்புகளை ஒருவராலும் மறக்க முடியாது. இந்த மாவீரர்கள் தங்களது உன்னதமான லட்சியங்களுக்காக அர்ப்பணிப்புத் தந்து போராடி, அவர்கள் விட்டுச் சென்ற வீரங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பதே இங்கு குழுமியிருக்கும், உயிரோடு இருக்கும் எங்கள் போன்றோருக்கு தேவையானது. தாங்கள் நேசித்த லட்சியங்களுக்காக தங்களது அர்ப்பணிப்புக்களை தந்து சென்ற அவர்களின் மரணங்கள் வீணாகப் போய் விடாது. நாங்கள்தான் மேலும் கூடிய அர்ப்பணிப்புகளுடன் அந்தப் பணிகளை தொடர வேண்டும் என்ற உறுதிகளை இங்கு கொள்ள வேண்டும். கடவுளின் ஆசியுடன் உருவாக்கப்பட்ட இந்த தேசம் புதிய சுதந்திரங்களுடன் பிறக்க வேண்டும் எனவும், மக்களினால், மக்களுக்கென, மக்களுக்காக ஆக்கப்பட்ட அரசாங்கம் ஒன்று இந்த உலகில் இருந்து அழிந்து விடக் கூடாது.' – என்று அமைந்தது அந்தப் பேச்சு.

சுமந்திரனின் பேச்சு அரசியல்வாதிக்களுக்கான நினைவூட்டல். அந்தச் சம்பவத்தில் ரணில் சுதந்திர தினத்தின் முன் எல்லோரும் சமமாக வாழும் தீர்வைத் தருவேன் என்று பேசினார். தமிழ் மக்கள் அனுபவித்து, அனுபவிக்கும் பேரினவாதம் உரிமைகள் மறுப்பது மட்டுமல்ல, மாற்று இனத்தவர்களின் மண்ணை அபகரிப்பதும், அவர்களுக்காக போராடி கல்லறையில் துயிலும் மாவீரர்களின் கல்லறைகளை புல்டோசர் கொண்டு இடித்து நாசமாக்கி, இறந்தவர்களுக்கான நிம்மதியை கூட தராது, அவர்கள் நினைவுகளையே மறுத்தவர்கள். அந்தப் பேரினவாதத்தில்தான் தனது பதவிக்கு கூட ரணில் தங்கி இருக்கிறார். ஆகவே அவரிலும் பார்க்க, தமிழ் மக்களின் அரசியல் அல்ல, அர்ப்பணிப்புகள் தான் முக்கியம்.

(வளரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir

* காலைக்கதிரின் அக்னி வீச்சாய் ....
* உதயனின் உயிர் நாதமாய் ....

# கொலைவாளின் கீழ் துணிந்து நின்ற பேனாப் போராளி கானமயில்நாதன்!

— ஐங்கரன் விக்கினேஸ்வரா —

**போர்க்கால நெருக்கடியிலும் தமிழ்ப் பத்திரிகை உலகை கம்பீரமாகத் துணிச்சலுடன் வழி நடத்தியவர் ம.வ.கானமயில்நாதன். பேனாப் போராளியான மறைந்த கானமயில் நாதன், தமிழ் மக்களின் குரலாக என்றும் ஒலித்தவர். யாழில் துணிச்சல் மிக்க பத்திரிகையாளரான ம.வ.கானமயில்நாதனனின் ஓராண்டு நினைவாக இன்று இக்கட்டுரை பிரசுரமாகிறது.**


தம் மேசையில் எப்போதும் ஆரவாரமின்றி பேனாப்போராளி.

ஈழத் தமிழினத்தின் ஏழு தசாப்தகால உரிமைப் போராட்டமும் அதற்காக அந்த இனம் செய்த புரிந்த – வேள்வித் தவமும் சொற்களால் அடக்கிவிட முடியாத உயரிய தியாகமும் அவமாகிப் போகாமல் அர்த்தமுள்ளனவாக வேண்டும்' என 'காலைக்கதிர்' பத்திரிகையின் பிரதம ஸ்தாபக ஆசிரியர் ம.வ.கானமயில் நாதன் தனது முதல் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டார்.

**காலைக்கதிரின் அக்னி வீச்சாக :**

2016 கார்த்திகை 05 முதல் தமிழ்ப் பேசும் மக்களின் தனித்துவக் குரலாக ஒலிக்கத் தொடங்கிய 'காலைக்கதிர்' பத்திரிகையின் பிரதம ஸ்தாபக ஆசிரியராக ம.வ.கானமயில்நாதன்பணியாற்றினார்.

÷பத்திரிகை காலத்தின் கண்ணாடி. ஒரு கருத்துருவாக்கி. அதற்கு அபாரமான சக்தி உண்டு. வாசகனின் ஆன்மாவைப் பற்றி, அவனை ஆகர்ஷித்து, நெறிப்படுத்தும் வழிகாட்டி அதுவே. வாசகனின் இருந்த மனக் குகைக்குள் வெளிச்சத்தைப் பாய்ச்சி, மாயையைப் போக்கி, கனவுகளைக் கலைத்து, யதார்த்தத்தை விளக்கி, சிந்தனை விழிப்புணர்வைத் தூண்டி, நம்பிக்கையை வளர்த்து நெறிப்படுத்தும் நல்லாசானும் அதுவே' – என்றும் தன் ஆதர்சனமாக தன் முதல் தலையங்கத்தில் கூறியுள்ளார் அவர்.

கதிரவனின் கதிர்கள் போன்று களனியிலே பூரித்து தலை சாய்க்கும் நெற்கதிர்கள் போன்று 2016.11. 05 முதல் 'காலைக்கதிர்' தங்குதடையின்றி – காலகதி பிசகாமல் காலைக் கதிரவனின் கதிர்கள் பார்மீது பரவுவது போல, 'காலைக் கதிரு'ம் நாளாந்தம் தவறாமல் விடிகாலையில் மக்களை நாடிவர ஆசிரியர் கானமயில்நாதன ஆற்றிய பங்கும் அளப்பரியதே.

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை என்ற தாரக மந்திரத்தை வரித்துக் கொண்டு, ஒரு புதிய – நீதிநாடி – நேரிய – சீரிய – ஊடக தர்மத்தைத் தனது பாதையாக வகுத்துக்கொண்டு, நமது இனத்தின் விடிவுக்காகவும், உயர்ந்த சமூகமாற்றத்திற்காகவும் இன, மதநல்லிணக்கத்துக்காகவும் அர்ப்பணிக்கும் வகையிலும் 'காலைக்கதிர்' தளராது இந்த வாழ்வில் பணியாற்ற பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் அப்பத்திரிகையின் முதல் இதழில் பிரதிக்ஞை செய்தமையை எளிதில் மறக்க முடியாதது.

சமூகப் பிரக்ஞையுடனும், இனவுணர்வுடனும் தனது மக்களின் சமூக விடுதலைக்காகக் கிளர்ந்தெழும் பத்திரிகை, தனது மக்களின் தனது சமூகத்தின் – இருப்புக்கே கவசமாகவும் காவலனாகவும் உயர்கின்றது என்று பொறித்தார் அவர். அந்த அரும் பணியே ம.வ.கானமயில் நாதனின் இலக்காக என்றும் இருந்தது.

தனது வாழ்நாள் முழுவதையும் பத்திரிகைக்காக அர்பணித்தது மாத்திரமன்றி ஈழத்துப் பத்திரிகை ஜாம்பவான்கள் என்று குறிப்பிடத்தக்க தினகரன் பத்திரிகை ஆசிரியர் சிவகுருநாதன், தினபதி பத்திரிகை ஆசிரியர் சிவநாயகம், வீரகேசரியின் ஆசிரியர் சிவப்பிரகாசம் ஆகியோரின் வரிசையில் வடக்கில் தன்னையும் தடம் பதித்தவரே கானமயில்நாதன்.

**துணிச்சலுடன் வழி நடாத்திய பத்திரிகையாளர்**

போர்க்கால நெருக்கடியிலும் தமிழ்ப் பத்திரிகை உலகை கம்பீரமாகத் துணிச்சலுடன்வழிநடாத்தியவர்ம.வ.கானமயில் நாதன்.


'காலைக்கதிர்' ஆசிரிய பீட பூஜையில் தம்பதியராக சங்கற்பிக்கிறார்...

ஊடகவியலாளர்கள் மக்களின் குரலாக இருக்க வேண்டும். செய்தியை உண்மைத் தன்மையுடன் சொல்லி, தமிழிற்கும், தமிழர்களுக்கும் பத்திரிகைத் துறையில் இவர் செய்த சேவை மிக்க அளப்பரியது.

ஈழத்துப் பத்திரிகை உலகைத் துணிச்சலுடன் தூக்கி நிறுத்தியவர் கானமயில் நாதன். ஈழ ஊடகத் துறையின் அடையாளமாகவும், மூத்த ஆளுமையாகவும் விளங்கிய மூத்த ஊடகவியலாளரும் கூட. 'உதயன்' – 'சஞ்சீவி' மற்றும் 'காலைக்கதிர்' பத்திரிகைகளின் பிரதம ஆசிரியரும் ஸ்தாபக ஆசிரியருமான ம.வ.கானமயில்நாதன் 22.11.2021 அன்று நல்லூரில் தனது 79 ஆவது வயதில் காலமானார்.


ஸ்தாபக ஆசிரியரும் பிரதம ஆசிரியருமான கானமயில் நாதன் காலைக்கதிரில் ஆரம்பநாளில் தம் பத்திரிகைப் படையணியுடன் கம்பீரமாக....

எதையும் சாதிக்க முடியும் என்று ஊடகத்துறைக்கு வரும் இளையோர்களுக்கு வழிகாட்டியாக, தமிழ் ஊடக வரலாற்றின் ஒரு பெரு ஆலமரமாக கானமயில் நாதன் பெருவிருட்சமாக விளங்கினார்.

**என்றும் ஊடக இளைஞனே !**

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ம.வ.கானமயில்நாதன் 1942 ஆம் ஆண்டு ஜுலை 25 ஆம் திகதி பிறந்தார். ஊடகவியலாளருக்கு இருக்க வேண்டிய இளஇரத்தம் அவரது உடலிலே என்றும் ஓடிக் கொண்டிருந்தது. அவர் ஓய்வுபெற்ற நிலையிலும் ஊடகப் பணியைத் தொடர்ந்த இளைஞன் என்றால் மிகையல்ல.

1962ஆம் ஆண்டு ஊடகத்துறையில் காலடி எடுத்து வைத்தது முதல் 56 ஆண்டுகளுக்கு மேலாக ஊடகத்துறையில் தடம்பதித்தார். 1962ஆம் ஆண்டு 'ஈழநாடு' பத்திரிகையில் உதவி ஆசிரியராகத் தொடங்கியது இவரது ஊடகத்துறை வாழ்வு. அதன்பின்னர் 1965ஆம் ஆண்டு தினபதி பத்திரிகையில் உதவி ஆசிரியராக இணைந்து பின்னர் செய்தி ஆசிரியராக உயர்ந்தார். 1983ஆம் ஆண்டு இனக்கலவரம் நடக்கும் வரை கொழும்பில் தினபதியிலேயே பணியாற்றினார்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் திரும்பிய இவர், பின்னர் வீரகேசரியில் பணியாற்றினார். அதன்பின், நவம்பர் 1985ஆம் ஆண்டு உதயன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டபோது. பிரதம ஆசிரியராகப் பெறுபேற்று நீண்டகாலமாக பிரதம ஆசிரியராகப் பணியாற்றினார்.

**உதயனின் உயிர் நாதமாய்**

தனது ஊடகப் பயணத்தினை வீரகேசரி ஆசிரியர் பீடத்தில் ஆரம்பித்து, தினபதி பத்திரிகையின் ஆசிரியராக கடமையாற்றிய போது தினபதி பத்திரிகை இடைநிறுத்தப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தில் பத்திரிகை ஒன்றை நடாத்த வேண்டிய தேவை எழுந்தபோது 1985 ஆம் ஆண்டு உதயன் பத்திரிகை உருவாக்கப்பட்டு அன்றிலிருந்து தொடர்ச்சியாகப் பத்திரிகைத் துறையில் பிரதம ஆசிரியராக தனது ஊடகப் பணியில் அசைக்க முடியாத முத்திரையைப் பதித்தார்.


பிரதம் ஆசிரியர் கானமயில்நாதன், ஆசிரியர் வித்தியாதரனுடன் வழமையான கலந்தாலோசனை...

(12ஆம் பக்கம் பார்க்க)

# கொலைவாளின் கீழ் துணிந்து ....



காலைக்கதிர் முதல் இதழை எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் வெளியிட, வடக்கு மாகாண முதல்வர் நீதியரசர் விக்னேஸ்வரன் பெறுகிறார். அருகில் ஸ்தாபக ஆசிரியரும் பிரதம ஆசிரியருமான கானமயில்நாதன்....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக அவர் பணியாற்றிய போது எதிர்கொண்ட ஆபத்துக்கள் சவால்கள் எண்ணிலடங்காதவை. ஆனால் அவற்றுக்கு எல்லாம் அஞ்சாது, தொடர்ந்தும் ஊடகப் பணியை முன்னெடுத்தார்.

**36 வருடங்கள் பிரதம ஆசிரியராக:**

பலதரப்பட்ட அரசியல் அனுபவ அறிவுடைய அவர், தமிழ் மக்களின் குரலாக மக்களுக்காகப் பேசுகின்ற நல்ல மனம் படைத்தவர். ஆகவே அவர் யாழ்.குடாநாட்டின் மிக மூத்த யாவரும் பெருமைப்படக் கூடிய ஒரு ஊடகவியலாளராக மிளிர்ந்தார்.

உதயன் பத்திரிகை 1985ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டது முதல் தனது வாழ்வின் இறுதிக்காலம் வரையிலான 36 வருடங்கள் பிரதம ஆசிரியராக கடமையாற்றியுள்ளமை ஒரு வரலாற்றுப் பதிவே.

இறுதியாக 'காலைக்கதிர்' பத்திரிகை 2016 இல் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் ஆசிரியர் பீடத்தையும் நெறிப்படுத்தினார். சிறந்த வழிகாட்டியாகவும் பண்பாளனாகவும் தன்னை நிலைநிறுத்திய பத்திரிகை ஆசான் இவர்.

**சத்தமற்ற ஊடகவியலாளராக :**

ஈழ விடுதலைப்போராட்டத்தின் சத்தமற்ற ஊடகவியலாளர்களுள் ஒருவராக இருந்து, மறைந்த மூத்த ஊடகவியலாளர் ம.வ.கானமயில்நாதன் தமிழ் மக்கள் மீதான அரச அடக்குமுறையை வெளியுலகத்துக்கு வெளிப்படுத்தியவர்.

உதயன் பத்திரிகை மீது, பேரினவாத அரசுகள் கொடுஞ்சினம் கொண்டிருந்து, உதயனின் குரலை நசுக்கி விடவேண்டும் என்று அந்த அரசுகள் கங்கணம் கட்டிச் செயற்பட்ட காலம். உதயன் பத்திரிகைமீது எண்ணிலடங்காத தாக்குத்தல்கள், உயிர் பறிப்புக்கள் நிகழ்ந்தன.

ம.வ.கானமயில்நாதன் மீது யாழ்ப்பாணம் இலுப்பையடிச் சந்தியில் வைத்து,



யாழ் ஊடக அமைய விருது பெற்றபோது.....

இராணுவ வாகனத்தால் திட்டமிட்டு விபத்து ஏற்படுத்தப்பட்டது. அதில் அவர் காயங்களுடன் தப்பியபோதும், அன்று முதல் கோல் ஊன்றி நடக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

ஆயினும் வடக்கில் இருந்து வெளியான தமிழ் மக்களின் குரலை கொடுங்கோலர்களால் நசுக்க முடியவில்லை.



பிரான்ஸில் விதுது பெற்றபோது....

ஊடக பரப்பில் உரிமை கோரப்படாத மரணங்களும் காணாமல் ஆக்கப் படுதல்களும் அச்சுறுத்தல்களும் நிரம்பி வழிந்த மண்ணில் சோரம்போகாது தனது ஊடகப் பணியை உதயன் நாளிதழில் அதன் பிரதம ஆசிரியராக இருந்து ஆற்றியவர் ம.வ.கானமயில்நாதன்.

**கொலைவாளின் கீழாக ஊடகப் பணி**

2005இன் பிற்பகுதியில் துப்பாக்கிதாரர்களது கொலைக் கரங்களில் இருந்து தப்பிக்க அவர் வருடக்கணக்கில் தனது அலுவலகத்தில் முடங்கிக் கிடந்தே, நாள் தோறும் உதயன் நாளிதழை வெளிக்கொணர்ந்தார்.

ம.வ.கானமயில்நாதனை அச்சுறுத்தல்களால் அடிபணிய வைக்கலாமென்று பலரும் எதிர் பார்த்தபோதும் தனது ஒற்றை பேனாவின் முனையை நம்பி கொலைவாளின் கீழாக ஊடகப் பணியாற்றியவர்.

தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்ட பரப்பில் ஊடக பங்களிப்பு பற்றிய வரலாற்றுப் பதிவுகளில் என்றுமே விலக்கப்பட முடியாத சக்திகளுள் ஒருவராக அவர் இருந்து வந்திருந்தார்.

**தமிழ் மக்களின் குரலாக :**

மறைந்த கான மயில்நாதன் நெருக்கடியான கால கட்டத்தில் தாயகத்தில் இருந்து ஊடகப்பணியாற்றிய மிக சொற்ப அளவிலான மூத்த ஊடகவியலாளர்களுள் ஒருவர்.

ஊடகவியலாளர்கள் மக்களின் குரலாக இருக்க வேண்டும். செய்தியை உண்மைத் தன்மையுடன் சொல்லவேண்டும். எதிலும் கேள்வி கேளுங்கள். எதற்காகவும் விட்டுக்கொடுப்புகளை செய்யாதீர்கள். ஊடகத்துறைக்கு வரும் இளையோர்கள் இதை மனதில் எப்போதும் வைத்திருங்கள்.

சாதிக்க முடியும் – என்று வழிகாட்டிய தமிழ் ஊடகம் வரலாற்றின் ஒரு பெரு ஆலமரம் சரிந்து ஓராண்டு உருண்டோடி விட்டது.

ம.வ.கானமயில்நாதனின் பாசறையில் வளர்ந்த பல ஊடகவியலாளர்கள் இன்றும் உலகின் பல திசைகளிலும் தேமதுரத் தமிழை வையகமெங்கும் காத்து வருகிறார்கள்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக உதயன் பத்திரிகை குரல் கொடுத்ததால் கடும் நெருக்கடிகளை நீண்டகாலமாக எதிர்கொண்டது. தமிழ் மக்களின் குரலாக, சத்திய நேர்மையுடன் கானமயில்நாதனின் பேனா உண்மைகளை வரிகளாக்கி வரலாற்றில் ஆவணமாக்கி உள்ளார்.

**பிரான்ஸின் தலைநகரில் விருது**

பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் தன்னார்வ அமைப்பின் விருது வழங்கும் விழாவில், நெருக்கடியான கால கட்டத்தில் தாயகத்தில் இருந்து ஊடகப்பணியாற்றியதை கௌரவித்து விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் தமிழ் மக்களின் குரலாக, சத்திய நேர்மையுடன் கானமயில்நாதனின் ஊடகத்துறையில் தேசியம் சார்ந்த நெருக்கடியான சூழலில் அர்ப்பணிப்புடன் கடமை யாற்றியமைக்காக 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் தேதி யாழ்.ஊடக அமையத்தால் அவர் வாழும்போதே கௌரவிக்கப்பட்டார்.

ஈழத்துப் பத்திரிகை வரலாற்றிலேயே தொடர்ச்சியாக ஆசிரியராகவிருந்து நெருக்கடியான போர்ச் சூழலிலும், ஊடக அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தனது இலக்கில் சிறிதும் தடம் மாறாது பயணித்துக்கொண்டிருந்த மூத்த ஊடகவியலாளர் ம.வ.கானமயில்நாதன் ஊடகப் பரப்பிலுள்ள இளையோருக்கு ஓர் எடுத்துக்காட்டு எனலாம்.

**இளையோருக்கு ஓர் எடுத்துக்காட்டு:**

'எமது மக்களுக்கான குரலாக நாங்கள் இருக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் எமது செயற்பாடுகள் அன்றும் – இன்றும் அமைந்தன. அதற்காகப் பலவற்றை இழந்தபோதும், ஆயினும் முன்நோக்கியே சென்றோம்'. இது உதயன் பத்திரிகையின் முதன்மை ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் கூறிய வார்த்தைகளாகும்.

'நாம் கடந்து வந்த பாதையில் சுமந்த வலிகளின் ஊடாகப் புரிந்துகொள்ள முடியும். ஊடகமாக மக்களுக்கான தகவல்களைச் சரிவர வழங்கி, எம் மக்களின் உரிமைகளுக்காகப் பேசுகின்றோம். அதனில் மிகுந்த நிறைவும் இருக்கின்றது' என்று



2015ஆம் ஆண்டு வழங்கிய பேட்டி ஒன்றில் பூரிப்புடன் தெரிவித்திருந்தார்.

தன் வாழ்வின் பெரும் காலத்தை தமிழ் மக்களுக்காக அர்ப்பணித்த ஊடகப் பெருந்தகை ம.வ.கானமயில்நாதன். மக்களுக்கான குரலாக ஒலித்த அந்தப் பேனாப் போராளி இன்று இல்லை. தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்பது என்ற கொள்கையின்படி, சமூகத்தின் காவலனாக தனது பணிகளைச் செய்ததில் முதன்மை ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் ஆற்றிய பங்கு அளப்பரியது.

### காலை சாணக்கியனுடன் ...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)
இதே நாடாளுமன்றத்தில் இப்போதைய ஜனாதிபதி எம்.பியாக அமர்ந்திருந்து குற்றம் சுமத்தினார் என்பதையும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

இருவரும் மாறி மாறி சுமத்திய குற்றச்சாட்டுகளை ஹன்சாட் பதிவில் அனுமதிப்பதா என்பது தொடர்பில் சபாநாயகர் முடிவு செய்வார் என அவைக்குத் தலைமை தாங்கிய உறுப்பினர் குறிப்பிட்டார்.

### ஜாவா பூகம்பத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதிவாகியிருந்தது. நிலநடுக்கம் காரணமாக ஏராளமான வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்து விழுந்தன. இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. முதல் கட்டமாக 20 பேர் பலியானதாக தகவல் வெளியானது. நேரம் செல்லச்செல்ல மீட்கப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே சென்றது. இரவு நிலவரப்படி உயிரிழப்பு 162 ஆக உயர்ந்துள்ளது. 300க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

### மாவீரர் பெயர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிகழ்வுநேற்றுக்காலை 9:30 மணியளவில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரால் நடத்தப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணி செயலாளர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொது ஈகை சுடரினை இரண்டு மாவீரர்களின் பெற்றோர்கள் ஏற்றிவைத்தனர். மாவீரர்களுக்கு அக வணக்கம் இடம் பெற்றதை தொடர்ந்துமலர் அஞ்சலிசெலுத்தப்பட்டது.

இன்றிலிருந்து எதிர்வரும் 27 ம் திகதி வரை மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனஎனதமிழ்தேசியமக்கள்முன்னணியின் மாவீரர் நாள் ஏற்பாட்டு குழு அறிவித்துள்ளது.

### சாட்டியிலும் ......





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொதுசுடரினை மூன்று மாவீரர்களின் தாய் ஏற்றி வைத்தார். தீவக சாட்டி நினைவேந்தல் ஏற்பாட்டு குழுவினரால் நினைவேந்தல் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் பொதுமக்கள் உணர்வுபூர்வமாக தமது அஞ்சலிகளை உயிர்நீத்த மாவீரர்களுக்காய் செலுத்தினர்.

### வவுனியா இராணுவ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவரது சடலம் கடந்த 19 ஆம் திகதி மகாவலி ஆற்றில் மிதந்து கொண்டிருந்த நிலையில் பிரதேசவாசிகளின் உதவியுடன் கட்டுகஸ்தோட்டை பொலிஸாரால் மீட்கப்பட்டது.

நேற்று கண்டி தேசிய வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும், அங்கு மரணத்துக்கான சரியான காரணத்தை கண்டறியமுடியாததனால் சடலத்தின் பாகங்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரசிக சம்பத் மேற்கொண்டு வருகின்றார்.

## பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா 97 ஆவது பிறந்தநாள் நிகழ்வு



கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம், புது செட்டித்தெருவிலுள்ள சாயி நிலையத்தில், பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 97 ஆவது பிறந்தநாள் நிகழ்வை, நாளை புதன்கிழமை அதிகாலை 5 மணி தொடக்கம் முன்னெடுக்கின்றது. மதியம் ஆராத்தியுடன் அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

ஊஞ்சல், சாயி பஜனை, திரி மங்கள ஆராத்தி, பிறந்தநாள் கேக் வெட்டுதல் போன்ற நிகழ்வுகள் உள்ளன. இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு, பிறந்தநாள் முன்னோட்டமாக, பாபாவின் பஞ்சமூர்த்த திருவுருவச்சிலைக்கு, பரிபூரண அபிகேம் செய்யப்பட்டு, சித்திரத் தேர் பவனி இடம் பெறவுள்ளது.

### மாவீரர்களின் பெயர்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
6.30 மணியளவில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டன. அவை நவம்பர் 27ஆம் திகதி வரையில் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளன.

தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக உள்ள பகுதிகளில் யாழ்.மாநகர சபையின் அனுமதி பெற்று இந்தக் கல்வெட்டுக்கள் வைக்கப்பட்டுள்ளன.

மாவீரரின் பெற்றோரால் ஈகைச் சுடரேற்றப்பட்டு கல்வெட்டுக்கள் ஒரே நேரத்தில் மாவீரர்களின் பெற்றோரால் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டன.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த மாவீரர்களை நினைவுகூரும் மாவீரர் வாரம் நேற்று ஆரம்பமானது.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தமது உயிரை போராட்டக்களத்தில் தியாகம் செய்தவர்கள் நினைவாக, கார்த்திகை 27 ஆம் திகதி மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 25. 07. 1942

கந்தன் அடியில் 22. 11. 2021




### அமரர் திரு. மருதப்பு வல்லிபுரம் கானமயில்நாதன்

**ஸ்தாபக மற்றும் பிரதம ஆசிரியர்**
**உதயன் - சஞ்சீவி மற்றும்**
**காலைக்கதிர் பத்திரிகைகள் (ஓய்வு)**
**திதி 11.12.2022**

இன்ப நிலை தேடும் வாழ்வில்
எழுத்தினையே இலட்சியமாக்கி
கத்திநுனியில் காலூன்றி
இன்னல்களையே உரமாக்கி - நல்
ஊடகரைத் துறைக்களித்து
யாம்பவானாய் வாழ்ந்திருந்தீர்!

அன்புநிறை உள்ளம் தாங்கி
நன்மகனாய் - நற்துணையாய் - நல்தலைவனாய் -
ஆனந்தமாய் எமையணைத்து - நன்நெறி
வாழ்ந்து எமையும் வாழச் சுட்டி
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திருந்தீர்!

ஆண்டு ஒன்று ஆகின்றது - எம்மை
ஆறாத்துயரில் தவிக்கவிட்டு
மாவைக் கந்தனடிதான் எய்தி - ஜென்மபயன் கண்டீரே!
வேண்டுகிறோம் சாந்தி பெற ஆத்மார்த்தமாய்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

குடும்பத்தினர்



காலைக்கதிர் Kalaikkathir

# கடினமான தீர்மானங்களை நாம் நடைமுறைப்படுத்துவதால் குற்றஞ்சாட்டப்படுகிறோம் என்கிறார் மத்திய வங்கி ஆளுநர்!

பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு மக்கள் சார்பற்ற சில கடின மான தீர்மானங்களை செயற்படுத்த வேண்டியுள்ளது. இதன் காரணமாக பாதிக்கப்படும் தரப்பினரால் எம் மீது குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படு கின்றன.

எவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டாலும், எடுக்கப்படும் தீர்மா னங்கள் சரியானவை என்றால், அவை நிச்சயம் நடைமுறைப்படுத்தப்படும் என்று மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்த லால் வீரசிங்க தெரிவித்தார்.

மாத்தறை ராகுல கல்லூரியின் நூறா வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற் பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் அந் தக் கல்லூரியின் பழைய மாணவரான மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்த லால் வீரசிங்க பிரதம அதிதியாகக் கலந் துகொண்டார்.

இதன்போது உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறு கையில் –

நாட்டின் பொருளாதார முகாமைத் துவமாயினும், தீர்மானங்கள் எடுப்பவர்க ளும், கொள்கைகளைத் தயாரிப்பவர்க ளும், உரிய முறையில் தகுதியுடையவர் களாக அந்தந்த பதவிகளில் செயற் படுவார்களாயின், எமக்கு இவ்வாறான நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண் டியேற்படாது.

தகுதியுடையோருக்கு உரிய இடம் வழங்கப்பட்டமையாலேயே ஏனைய நாடுகள் அபிவிருத்தி அடைந்துள்ளன.

மாறாக, தகுதியற்றவர்கள் பொருத்த மற்ற இடங்களுக்கு நியமிக்கப்படும் போது முன்னேற்றம் வெற்றியளிக்காது. தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி களிலிருந்து மீள்வது இலகுவான விடய மல்ல என்பதை மத்திய வங்கியின் ஆளுநர் என்ற ரீதியில் தெரிவித் துக்கொள்கிறேன்.

எனவே, சில கடினமான தீர்மா னங்களையும் எடுக்கவேண்டி யுள்ளது. எவ்வாறிருப்பினும், அவை மக்களுக்கு ஏற்ற தீர்மா னங்களாக இரு க்கா.

மக்கள் சார்பற்ற கடின மற்ற தீர்மானங்களை எடுக்கும்போது, அவற்றால் ஒரு தரப்பினர் பாதிக் கப்படக் கூடும். இந்தப் பாதிப்புக் களுக்கு மத்தி யில் எம் மீது குற்றச்சாட்டுக்களும் முன் வைக்கப்படலாம்.

எவ்வாறிருப்பினும், எவ்வாறான குற்றச் சாட் டுக்கள் முன்வைக்கப்பட்டாலும், நம் மால் எடுக்கப்படும் தீர்மானங்கள் சரியா னவை என்றால் அதனை இடைவிடாது



முன்னெடுத்துச் செல்லக்கூடிய இயலுமை காணப்பட வேண்டும்.

எனவே, தற்போது எம்மால் எடுக்கப்ப டும் சில தீர்மானங்களால் குறுகிய கால நெருக்கடிகள் ஏற்படுகின்ற போதிலும், அவற்றை செயற்படுத்த வேண்டியது கட் டாயமாகும். அவ்வாறு செய்தால், விரை வில் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முடியும். – என்றார்.

# தேர்தல்களில் பெரமுன படுதோல்வி அடையுமாம்!

## வாசுதேவ ஆரூடம்

மக்களாணை உண்டு எனக் குறிப்பி டும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த அரசாங்கத்துக்கு அழுத் தம் பிரயோகிக்க வேண்டும்.

இடம்பெறவுள்ள தேர்தல்களில் பொது ஜன பெரமுன படுதோல்வி அடையும் என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும் என இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பின ருமான வாசுதேவ நாணயக்கார தெரி வித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத் துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறு கையில் –

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட் டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப் படவில்லை.

இந்த வரவு – செலவுத்திட்டத்தின் பரிந் துரைகள் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டால் நடுத்தர மக்கள் மிக மோசமான நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற் றும் அவர் தலைமையிலான அரசாங் கத்துக்கு மக்கள் மத்தியில் நன்மதிப்புக் கிடையாது. அரசாங்கத்தின் தீர்மானங் களை மக்கள் கடுமையாக விமர்சிக்கி றார்கள்.

மக்களாதரவு இல்லாமல் பொருளா தாரப் பாதிப்புக்கு தீர்வு காண முடியாது.

நகர மற்றும் பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப்



பிற்போட அரசாங்கம் பல்வேறு வழிமுறை களைத் தற்போது கையாள்கிறது.

எல்லை நிர்ணய குழு அறிக்கையினூ டாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பிற்போட அரசாங்கம் அவதானம் செலுத் தியுள்ளது.

தமக்கு மக்களாணை உண்டு எனக் குறிப்பிடும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெர முன உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய காலத்தில் நடத்த அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் தேர்தல்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெர முன படுதோல்வி அடையும் என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொரு ளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் பொதுஜன பெரமுன மீதான மக்களின் வெறுப்பைத் தீவிரப்படுத்தி, அதனூடாக ஐக்கிய தேசிய கட்சியை பலப்படுத்திக்கொள்ள முயற் சிக்கிறார்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட் டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கு வதை விடுத்து அமைச்சரவை அமைச் சுக்களின் எண்ணிக்கையை ஸ்திரப்ப டுத்த அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை முற்றிலும் தவறானது.

அரச செலவினங்களைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண் டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத் தினோம். – என்றார்.

# பஸிலின் வருகையால் அரசுக்குள் நெருக்கடி மேலும் தீவிரமடையும்!

## எச்சரிக்கிறார் முஜிபுர் ரஹ்மான்



பஸில் ராஜபக்ஷவின் வருகையுடன் அரசாங்கத்தினுள் அரசியல் நெருக்கடி கள் மேலும் தீவிரமடையும் என்பது தெளி வாகிறது. பொதுஜன பெரமுனவில் அமைச்சுப்பதவிகளைக் கோரும் 10 பேருக்கு அதனைப் பெற்றுக் கொடுப் பதற்காகவே பஸில் ராஜபக்ஷ மீண்டும் வருகை தந்துள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலை வர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊட கவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரி வித்த அவர் மேலும் குறிப்பிடுகை யில் –

மீண்டும் நாட்டுக்கு வருகை தந்துள்ள பஸில் ராஜபக்ஷவை வரவேற்பதற்காக பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் விமான நிலையத் திற்குச் சென்றிருந்தனர்.

உண்மையில் அவர்களுக்குப் பதி லாகக் குற்றத்தடுப்பு பிரிவினரே அங்கு சென்றிருக்க வேண்டும். விமான நிலைத் திலேயே அவர் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும்.

எவ்வாறிருப்பினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கும் வரையில் அவ் வாறு எதுவும் இடம்பெறாது என்பதை நாம் நன்கு அறிவோம்.

பொருளாதாரக் குற்றமிழைத்த நபரை வரவேற்பதற்காக மாலையுடன் விமானம் நிலையம் சென்றவர்களின் மூளையை சோதனை செய்யவேண்டும்.

பொதுஜன பெரமுனவிலுள்ள சிரேஷ்ட தலைவர்கள் மேலும் 10 அமைச்சுக் களை கோரிக் கொண்டிருக்கின்றனர். அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்காகவா பஸில் ராஜபக்ஷ வருகை தந்துள்ளார் என்ற கேள்வி எழுகிறது.

அவ்வாறில்லை எனில் பிளவடைந் துள்ள பொதுஜன பெரமுனவை ஒன்றி ணைப்பதற்காக வருகை தந்துள்ளாரா என்ற கேள்வியும் எழுகிறது.

பஸில் ராஜபக்ஷவின் வருகையுடன் அரசாங்கத்தினுள் பாரிய அரசியல் நெருக்கடிகள் தோற்றம் பெறவுள்ளமை தெளிவாகத் தெரிகிறது. அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள் வதற்கான முயற்சி யில் பொதுஜன பெரமுன பல குழுக்க ளாகப் பிளவடைந்துள்ளது. – என்றார்.

# நாட்டின் தற்போதைய அரசமைப்பில் கடுமையான மாற்றங்கள் வேண்டுமாம்!

## கொழும்பு பேராயர் கர்தினால் வலியுறுத்து

தற்போது நடைமுறையில் உள்ள இந்த நாட்டின் சட்டங்கள், ஒரு தனிநப ருக்கு அல்லது ஒரு குறிப்பிட்ட தரப்பிற்கு முழு தேசத்தையும் அவரவர் விருப்பத் திற்கேற்ப ஆட்சி செய்ய அதிகாரம் அளிக் கும் வகையில் பிரகடனப்படுத்தப்பட்டுள் ளதாகக் கொழும்பு பேராயர் தெரிவித்தார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப் பட்ட 12 குடும்பங்களுக்கு புதிதாக நிர் மாணிக்கப்பட்ட 12 வீடுகளைக் கையளிக் கும் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை யாற்றிய போதே கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்நிலையில் தற்போதுள்ள அரச மைப்பில் கடுமையான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்றும் உண் மையான ஜனநாயகத்தை அனுமதிக் கும் புதிய அரசமைப்பை உறுதிப்படுத்த



வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சுதந்திரம் அடைந்து கடந்த 74 ஆண் டுகாலமாக மக்களுக்கு பொய்களைச் சொல்லி அவர்களை ஏமாற்றி அவர்கள் விரும்பியதைச் சாதிப்பதற்காக அரசியல் தலைவர்கள் சட்டத்தைக் கையாண்டனர் என்றும் குற்றம் சாட்டினார்.

# கிளைபோசேட் களைக் கொல்லி மீதான தடையை நீக்க வர்த்தமானி!

கிளைபோசேட் என்ற களைக்கொல் லியை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப் பட்டிருந்த தடையை நீக்குவதற்கான வர்த் தமானி அறிவித்தல் அரசாங்க அச்சகத் துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

வர்த்தமானியில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கையொப்பமிட்டு அரச அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள் ளதாக விவசாய அமைச்சின் புதிய செய லாளர் குணதாச சமரசிங்க தெரிவித்துள் ளார்.

தடை நீக்கம் தொடர்பான அறிக்கை யை அமைச்சு வெளியிட்டுள்ள போதிலும், ஓகஸ்ட் மாதம் கிளைபோசேட் இறக்குமதி யை அனுமதிப்பதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட் டது.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவால் ஓகஸ்ட் 5 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் கையொப்பமிடப்பட்டது.

கிளைபோசேட் இறக்குமதிக்கான பதி வாளரின் சிபாரிசுக்கு உட்பட்டு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாய கம் இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தை வழங்குவார் என்று வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.11.2022இல் வெளியிடப்பெற்றது.